சிறகுகள்
தனித்து வாழும் பெண்களுக்கான செயல்பாட்டு கூட்டமைப்பு
Single Women Action Network (SWAN)
+91 86680 91453
swan@tn1st.in
tn1st.in
மாநில அலுவலகம்:
Old No.131 New No.271, முதல் தளம்,
லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன்
சென்னை, தமிழ்நாடு – 600 001, இந்தியா.

# தனித்து வாழும் பெண்களுக்கான 2வது மாநாட்டு வரையறை

**22 | மார்ச் | 2025 | மதுரை**

## 1 முன்னுரை

*1.1 தனித்து வாழும் பெண்கள்:*

**வரையறை**

தனித்து வாழும் பெண்கள் என்போர் சுயவிருப்பதின் அடிப்படையில் அல்லது சூழ்நிலையின் காரணமாக தனித்து வாழ்கிறார்கள். 'தனித்து' வாழ்வதற்கான காரணங்கள் மாறுபட்டவை. சிலர் தம் சுயவிருப்பதின் பேரில் திருமணம் செய்து கொள்ளாமலேயே தனித்து வாழ்கிறார்கள், சிலர் சிறிது கால மணவாழ்விற்குப் பிறகு பிரிந்துவிடுகிறார்கள். சிலர் கணவரால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார்கள், சிலர் மணவிலக்குப் பெற்றவர்களாகவும், சிலர் விதவைகளாகவும், சிலர் 'அரை விதவைகள்' என்ற நிலையிலும் வாழ்கிறார்கள். குறிப்பாக, மீனவச் சமூகங்களில் கடலுக்குச் சென்ற கணவனின் நிலை என்ன ஆனதென்று தெரியாத நிலையில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறார்கள். சிலர் சட்டப்படி மணமானவர்களாக இருந்தாலும், நடைமுறையில் பெரும்பாலும் 'தனித்தே' வாழ்கிறார்கள். இவர்கள் தனித்து வாழும் நிலையை விட கணவருடன் சேர்ந்து வாழ்வதில் அதிகக் கொடுமைகளை எதிர்கொள்கிறார்கள். இவர்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் களங்கம் சுமப்பவர்களாகவும் தம் மீதே பழி போடப்படும் நிலையிலும் இருக்கிறார்கள்.

*1.2. தனித்து வாழும் நிலையின் பல்வேறு வடிவங்கள்*

தனித்து வாழும் நிலையின் பல்வேறு வடிவங்களையும் உணர்த்தக்கூடிய அதே வேளையில் அவற்றின் தனித்தன்மைகளையும் விளக்கும் வகையில் விரிவான வரையறை தேவைப்படுகின்றது. ஒவ்வொருவரது வாழ்க்கை அனுபவங்களை அங்கீகரிப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான ஆதரவுத் திட்டங்கள் மற்றும் சட்டங்களையும் வடிவமைப்பதற்கும் இது தேவைப்படுகிறது.

*1.2.1. விதவைகள்*

**வரையறை:**

தனது கணவனின் மரணத்தை தொடர்ந்து ஒரு பெண் விதவை ஆகிறார், இவர்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார அடிப்படையிலானப் புறக்கணிப்புக்கு உள்ளாகிறார்கள்.

**சவால்கள்:**

1. பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் மூட நம்பிக்கைகளின் காரணமாகக் கணவரை இழந்த பெண்கள் சுப காரியங்களில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்படுதால் கடுமையான உளவியல் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.
2. இவர்கள் மீது கணவரின் மரணத்திற்கு காரணமானவர் என்ற பழி சுமத்தப்படுகிறது
3. நிவாரணங்களைப் பெறவும் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற காரணங்களுக்காகவும் கணவர் இறந்த ஓராண்டுக்குள் வெளியே வருவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.
4. அனைத்து வகையிலும் பிறரைச் சார்ந்திருக்கும் நிலையால் சுயச்சார்பையும் சுயமரியாதையையும் இழக்கின்றனர்.

5. அவர்களது உடைமைகள் அனைத்தும் அபகரிக்கப்படுவதால் வறுமையில் வாடும் நிலை ஏற்படுகிறது.
6. தனித்து வாழும் பெண் பெயரில் அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் இல்லாததால் அரசு நலத்திட்டங்களைப் பெறவும் சொத்துரிமைகளைப் பெறவும் இயலாத நிலை ஏற்படுகிறது.
7. தனித்து வாழும் பெண்கள் அதிக அளவில் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

**இளம் விதவைகள்**

*3.1. வரையறை:*

இளம் வயதில் கணவர்கள் அகால மரணம் அடைந்ததால் விதவையானவர்கள். இதில் பெரும்பாலும் குடிப்பழக்கம் காரணமாக கணவனை இழந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

*3.2 சவால்கள்:*

கிராமங்களைச் சுற்றியுள்ள மதுக்கடைகள் இளம் தலைமுறையை மது போதைக்குக் கொண்டுசெல்கின்றன, மேலும் இது இளவயதிலேயே மரணத்திற்கு இட்டுச் செல்கிறது. சிறு வயதிலேயே திருமணம் நடந்துவிடுவதன் காரணமாக, அந்தப் பெண்கள் இளம் விதவைகளாகிறார்கள் (சிலர் பதின்பருவத்தினராக இருக்கிறார்கள்), பள்ளிப் படிப்போ, ஏதேனும் தொழில் செய்யும் திறனோ இல்லாமல், சிறு குழந்தைகளுடன் ஆதரவற்ற நிலையில் இருக்கிறார்கள்.

அரசுக்கு மது விற்பனை மூலம் பெறப்படும் வருமானத்தைவிட அதனால் ஏற்படும் பாதிப்புகளை ஈடு செய்ய ஏற்படும் இழப்புகள் அதிகமாக உள்ளது.

**4 ஆணவக்கொலையால் பாதிப்பு நிலைமைகள்**

*4.1 வரையறை:*

சாதி மறுப்புத் திருமணம் காரணமாக அல்லது சாதி அடிப்படையிலான கொடுமைகள் காரணமாகக் கணவர் கொலை செய்யப்பட்டதால் விதவையான ஒரு பெண்.

*4.2 சவால்கள்:*

இந்தப் பெண்கள் போலியான சாதிப் பெருமையால் பாதிக்கப்பட்டவர்களாவர். அவர்களும், அவர்களது குழந்தைகளும், உறவினர்களும் உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அனைத்து ஆதரவு அமைப்புகளிலிருந்தும் துண்டிக்கப்படுகிறார்கள், மேலும் பெரும்பாலும் அவர்களது குடும்பங்களாலேயே ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.

அரசாங்கத்திற்கு அதிகாரப்பூர்வ நிலைப்பாடு இருக்கிறது என்றபோதிலும், தற்போதைய சட்ட விதிகள் அவர்களைப் பாதுகாக்கவோ அல்லது மறுவாழ்வு அளிக்கவோ போதுமானதாக இல்லை.

**5 விதவை - கழிவுநீர்/கையால் மலம் அள்ளும் தொழிலாளி கொலை (பலவகை பாதிப்பு நிலைமைகள்)**

*5.1 வரையறை:*

கழிவு நீர் தொட்டி அல்லது மலம் அள்ளும் வேலையின் போது உயிரிழந்தவர்களின் மனைவிமார்கள்.

*5.2 சவால்கள்:*

கையால் மலம் அள்ளும் வேலை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. இழப்பீடு கிடைத்த பிறகும் கூட பெண்கள் களங்கத்திற்கு ஆளாகிறார்கள் ஏனெனில் அவர்களில் பலர் தங்களின் கணவர்களுடைய வேலையை மறைக்கிறார்கள்.

**6. மீன்பிடித் தொழிலாளர்கள் (கடல், அரை விதவை)**

*6.1 வரையறை:*

'கடலில் காணாமல் போனவர்களின்' மனைவிகள்.

*6.2 சவால்கள்:*

தங்களின் கணவர்களின் கதி குறித்து நிச்சயமற்ற நிலைமை பெண்களை மனதளவில் பெரிதும் பாதிக்கின்றது. இந்தப் பெண்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் ஆதரவு கிடைக்க மேலும் ஏழு ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருக்கிறது. இது கூடுதல் பொருளாதார சுமையை ஏற்படுத்துகிறது, குடும்பத்தின் நல்வாழ்விற்கும், குறிப்பாக உரிய காலத்தில் தேவைகள் நிறைவேறியாக வேண்டிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கும் பாதகமாக இருக்கிறது.

கடல்சார் மீனவர் நலவாரியத்தால் இந்த விதவைகளுக்கு உறுப்பினர் தகுதி (உதவி நிதியுடன் கூடிய பலன்களும்) மறுக்கப்படுகிறது. இவ்வாறு மறுக்கப்படுவது உள்நாட்டு மீனவர் நலவாரியத்திலும் இருக்கிறது.

**7 ஜவுளித் தொழிலாளர்கள்**

*7.1 வரையறை:*

ஜவுளித் துறையில் வேலை செய்யும் எந்த வயதுமுள்ள தனித்து வாழும் பெண்கள்.

*7.2 சவால்கள்:*

ஜவுளித்துறை இளம்பெண்களை, குறிப்பாக இளம் தனிப் பெண்களை வேலைக்கு எடுக்க விரும்புகிறது. வேலை நிலைமைகள் அவர்களது உடல் நலத்தை, குறிப்பாக அவர்களது சுவாசம் மற்றும் குழந்தைப் பேறு நலத்தை மோசமாக பாதிக்கிறது. அவர்கள் வேலையில் இருக்கும்போதும் அதற்குப் பிறகும் நீண்ட காலத்திற்கு ஆயுட்கால விளைவுகளை ஏற்படுத்துகிறது.

பாலியல் ரீதியான தொனியுடன் உடல் சார்ந்த, வாய்மொழி சார்ந்த அத்துமீறல்கள் பரவலாக இருக்கின்றன, ஆனால் களங்கம் சுமத்தப்படுத்துவதன் காரணமாகவும், பாதிக்கப்பட்டவர் மீதே பழிபோடும் போக்கின் காரணமாகவும் இந்தப் பெண்கள் அரிதாகவே புகார் செய்கின்றனர்.

## 8 பாலியல் தொழிலாளர்கள்

*8.1 வரையறை:*

வாழ்வாதாரத்திற்கு பாலியல் தொழிலைச் சார்ந்திருக்கும் பெண்கள்.

*8.2 சவால்கள்:*

பாலியல் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் தனித்து வாழும் பெண்களே. அவர்களது வருமானம் என்பது மிகப்பெரும் அளவுக்குக் குறிப்பிட்ட வயது வரம்பிற்கு உட்பட்டதாக இருக்கிறது. இதர தொழிலாளர்களை விட இவர்கள் வியாதிகளில் விழுவது அதிகமான விகிதத்தில் நிகழ்கிறது. பெரும்பாலான சட்டபூர்வ உரிமைகளுக்கான தகுதி இல்லாதவர்களாக, ஓய்வுக்குப் பிறகு சமூக பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள்.

கல்வி பயில்வதற்கான சுமூகமான சூழல் இவர்களது வீடுகளில் பெரும்பாலும் இருப்பதில்லை, ஆகவே குழந்தைகள் பெரும்பாலும் குறைந்த கூலிக்கு குற்றம் சார்ந்த வாழ்க்கை முறைக்குச் செல்கிறார்கள். கல்வி உலகத்தில் இக்குழந்தைகளைத் தக்க வைப்பதற்குப் பாதுகாப்பான வெளிகள், விளையாட்டு மைதானங்கள் அல்லது தனிப்பயிற்சி மையங்கள் கிடையாது.

## 9 பிரிந்து வாழ்பவர் / குடும்ப வன்முறைக்கு / நெருக்கமான கூட்டாளியின் வன்முறைக்கு இலக்காகக் கூடியவர்

*9.1 வரையறை:*

தங்களது கணவர்கள்/நெருங்கிய கூட்டாளிகளிடம் இருந்து பிரிந்து வாழும் பெண்கள் மற்றும்/அல்லது அவர்களிடமிருந்து வன்முறையை எதிர்கொள்பவர்கள்.

*9.2 சவால்கள்:*

இவர்கள் பெருமளவிற்கு உடல்ரீதியான துன்புறுத்தல் மற்றும் மரணம் உள்ளிட்ட வன்முறைகளுக்கு இலக்காகிறார்கள், அத்துடன் இவர்களது உடைமைகள் பறிக்கப்படுகின்றன, சித்திரவதைகளுக்கு உள்ளாகிறார்கள். குழந்தைகளை பராமரிப்பு பொறுப்பு பேரம் பேசுவதற்கான விஷயமாக பெருமளவிற்கு பயன்படுத்தப்படுகிறது, அதன் மூலம் இவர்கள் வன்முறைச் சூழல்களில் வைக்கப்படுகிறார்கள்.

விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் (FTSC), தனி POCSO நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, வழக்குகளைத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் ஆவது (இந்தியாவில் குற்றங்கள் அறிக்கை - 2022ன் படி குடும்ப வன்முறை தொடர்பான நிலுவை வழக்குகளைத் தீர்ப்பதற்கு 49 ஆண்டுகள் ஆகும்) பெண்களைப் பிணைக் கைதிகள் போல வைத்திருக்கிறது, அவர்களது வாழ்க்கையை நிலையற்றதாக்குகிறது.

## 10 தீக்காயங்கள்/அமில தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள்

*10.1 வரையறை:*

தீக்காயங்கள் மற்றும்/அல்லது அமிலத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் பெண்கள்.

*10.2 சவால்கள்:*

இந்த பெண்கள் பெரும்பாலும் ஆணின் உடைமையாகவும், சலுகையாகவும் தாக்குதல்களை எதிர்கொள்கின்றவர்களாக இருக்கிறார்கள். தீக்காயங்கள் பெரும்பாலும் திருமண

வாழ்விற்குள் நிகழ்கிறபோது, அமில தாக்குதல் திருமணத்திற்கு முன்பே (பெரும்பாலும் நிராகரிப்பதன் காரணமாக) நிகழ்கிறது.

இவர்களின் வாழ்க்கையை அபாயகரமானதாக வைத்திருக்கும் வன்முறை அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக இருக்கின்றன. இந்த தொடர்ச்சியான அச்சுறுத்தல் வேலை வாய்ப்பைக் கடினமாக்குகிறது, பாதிக்கப்பட்ட பெண்ணை வன்முறையாளன் பின்தொடர்வான் என்றால் வேலையளிப்பவர்கள் மற்ற தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்த கவலையுடன் இவர்களுக்கு வேலையளிக்க மறுப்பதில் உறுதியாக இருக்கிறார்கள்..

இவர்களின் மனவேதனைக்கும் உடல் நலனுக்கும் தொடர்ச்சியான ஆயுட்கால பராமரிப்பு தேவைப்படுகிறது. மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையும் கூட ஆயுட்காலம் முழுவதும் தேவைப்படுகிறது. தற்போதுள்ள நிவாரண ஏற்பாடுகளில் இந்த இரண்டுமே இல்லை.

## 11 விவாகரத்து பெற்றவர்கள்

*11.1 வரையறை:*

சட்டப்பூர்வமாக விவாகரத்து பெற்ற பெண்கள்.

*11.2 சவால்கள்:*

விவாகரத்துத் தீர்ப்பு இறுதியாகக் கிடைத்த பிறகு, அதிலுள்ள ஆணைகள் செயல்படுத்தப்படுவதில் கூடுதல் தடங்கல்களைப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். சட்ட நடைமுறைகளே கூட அவர்களது சக்தியைப் பெருமளவிற்கு உறிஞ்சிவிடுகிறது, தீர்ப்பினால் அதிருப்தியடையும் கணவர்களின் எதிர் நடவடிக்கைகள் பெரும்பாலும் வன்முறையாக மாறுகின்றன.

ஊதியத்துடன் கூடிய வேலையை மீண்டும் பெறுவது, தனது முந்தைய பெயருக்குத் திரும்புவது (அவரது சான்றிதழ்களில் அந்தப் பெயர்தான் இனி இருக்கும்), புதிய குடும்ப அட்டை பெறுவது, குடியிருப்பு வசதியைப் பெறுவது ஆகியவற்றுடன் வாழ்க்கையை மீண்டும் தொடங்குவது என்பது சமூக விதிமுறைகளாலும் அரசாங்க நடைமுறைகளாலும் பெரும் போராட்டமாக இருக்கிறது. பாலியல் துன்புறுத்தல் இயல்பானதாக பரவலாக நிகழ்கிறது.

## 12 இயலாமையுள்ள தனித்து வாழும் பெண்கள் (பலவகை பாதிப்பு நிலைமைகள்)

*12.1 வரையறை:*

எந்தவொரு உடல் அல்லது மன இயலாமை உள்ள, நிலையான கவனிப்பும் ஆதரவும் தேவைப்படும் பெண்கள்.

*12.2 சவால்கள்:*

இயலாமை உள்ள பெண்கள் பெரும்பாலும் திருமணமாகாதவர்களாக இருக்கிறார்கள், அவர்களது பெற்றோர் குடும்பங்களில் கூட அவர்கள் திருமணத்திற்குத் தகுதியவற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். சில நேரங்களில் அவர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் ஒரு சுமையாகக் கருதப்படுகிறார்கள். அவர்களது வாழ்க்கையும் வாழ்வாதாரமும் எப்போதுமே பலவீனமாக இருக்கும் நிலையில், பெற்றோர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களது வாழ்க்கை மிகவும் அவலமானதாக மாறுகிறது.

சிறுமிகளைப் பொறுத்தவரையில் சுயச்சார்பு வாழ்வாதாரத்திற்குத் தேவையான சந்தைப்படுத்தல் திறமைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன, ஆகவே

அவர்களது சார்பு நிலை கட்டமைக்கப்பட்டு விடுகிறது. குடும்பத்தின் நல்லெண்ணத்தையும் பரிவையும் எப்போதும் சார்ந்திருக்க வேண்டிய நிலையில், இச்சிறுமிகளுக்கு வயதாக வயதாக வாழ்க்கை மேலும் மேலும் அவலமானதாக மாறுகிறது..

**13 இயலாமை உள்ள குழந்தைகளுடனான தனித்து வாழும் பெண்கள்  (பலவகை பாதிப்பு நிலைமைகள்)**

*13.1 வரையறை:*

குறைந்தது, ஒரு இயலாமைக் குழந்தையைக் கொண்டுள்ள தனித்து வாழும் பெண்கள்.

*13.2 சவால்கள்:*

தனித்து வாழும் ஒரு பெண்ணிற்கு ஒரு இயலாமைக் குழந்தையை கவனித்துக் கொள்வதில் இரு மடங்கு அல்லது மூன்று மடங்கு முயற்சிகள் தேவைப்படுகின்றன. சில நேரங்களில், கணவன் - தன்னுடைய குழந்தையாகவே இருந்தாலும் கூட - இயலாமைக் குழந்தையை கையாள்வதில் தனக்குள்ள இயலாமையின் காரணமாக மனைவியைக் கைவிட்டுவிட்டுப் போவதால், அந்தப் பெண் தனித்து வாழ்பவர் ஆகிறார்.

**14திருமணமே செய்துகொள்ளாத பெண்கள்**

*14.1 வரையறை:*

இதுவரை திருமணம் செய்து கொள்ளாத, தங்கள் சமூகத்தின் வழக்கமான திருமண வயதைக் கடந்த பெண்கள்.

*14.2 சவால்கள்:*

சாதாரணமான திருமண வயது சமூகங்களுக்கிடையே மாறுபடுகின்றது - பெண்களைப் பொறுத்தவரையில் 12 முதல் 30 வயது வரை என இருக்கிறது. வாழ்க்கையில் இழந்துவிட்டதாக சமூக நிர்பந்தங்களை இவர்கள் எதிர் கொள்கிறார்கள், தங்களது குடும்பங்களுக்கு ஒரு சுமையாக மாறுகிறார்கள். தங்களுடைய வருமானத்தில் இவர்களுக்கு கட்டுப்பாடு இருப்பதில்லை, குடியிருக்கும் வசதிகளைப் பெறுவதற்கான இவர்களது உரிமை பலவீனமானதாக, எப்போதும் ஆணின் நல்லெண்ணத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. தங்களது முழு வருமானத்தையும் பறிகொடுப்பது, உடல் சார்ந்த தன்னாளுமையை இழப்பது, ஒழுக்கக் கண்காணிப்பு, குடும்ப சொத்துக்களை பயன்படுத்துவதில் கட்டுப்பாடு ஆகியவை இவர்கள் வழக்கமாகத் தருகின்ற விலையாகும்.

தனித்து வாழும் பெண்கள் எல்லோருமே உழைக்கும் பெண்கள்தான் - அவர்களுக்கு வேறு வழி இல்லை. வீட்டிற்கு வெளியே, இதர அனைத்துத் தனித்து வாழும் பெண்களைப் போலவே பாலியல் துன்புறுத்தல்களுக்குப் பெரிதும் இலக்காகிறார்கள்.